RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s2144

OPEN ACCESS

# சங்க இலக்கியத்தில் பறவைகள்

**பெ. சுமதி [அ], ச. சரண்யா [அ]**

[அ] தமிழ்த்துறை, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா.

# Birds in Sangam Literature

**P. Sumathi [a, *], S. Saranya [a]**

[a] Department of Tamil, Madurai Kamaraj University, Madurai-625021, Tamil Nadu, India

* Corresponding Author: lakshmisaran333@gmail.com

Received: 26-08-2022
Revised: 30-09-2022
Accepted: 05-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

Living things in world is of two division one is plants and the other is animals. Animals are both single-celled and multi-celled and the multi-celled animals have invertebrates. Animals without invertebrates are the water-dwelling fishes, the water-land-dwelling frogs, the crawling snake, crocodiles and so on. The poets of the Sangam period who looked closely at the birds have studied their life patterns. Sangha literature characterizes birds as 'Pullinangal'. Only the peacock and the parrot are better described among the Pullinangal. Asunam, Thutunam, Puravu, Chicks, Bettle and Iruthalaipul are some of the birds described in Sangam literature. Sangam songs describes how these birds live in the five regions of Kurinji, Mullai, Marutham, Neithal and Palai. Thus the article examines the birds shot in the five land forms of Tamilnadu.

**Keywords:** Sangam period, Pullinangal, Mullai, Marutham, Neithal, Palai

## முன்னுரை

மக்கள் வாழ்க்கையில் ஒழுகிய பல்வேறு நெறிகட்டும் அவர்கள் வாழ்ந்த நிலப்பகுதிகட்கும் தொடர்புகண்டு புதிய ஓர் இலக்கிய மரபினைத் தோற்றுவித்தவர் தொல்காப்பியராவர். மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும், வயலும் வயலைச் சார்ந்த இடமும் மருதம் என்றும், கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல் என்றும், முல்லையும் குறிஞ்சியும் திரிந்த வளம் குறைந்த இடம் பாலை என்றும் வழங்கப்பட்டன. இந்த ஐந்திணைகளிலும் வாழும் பறவைகளைப் பற்றியும் அவற்றின் வாழ்க்கை முறைகளைப் பற்றியும் புலவர்கள் அறிந்து வைத்திருந்தனர். பறவைகளின் பழக்க வழக்கங்கள், பறக்கும் முறை, கூடுகள், கூடு கட்டுவதற்காகாத் தேர்ந்து கொள்ளும் மரங்கள், குஞ்சுகளைக் காத்து வளர்க்கும் முறைகள், பறவைகளின் வகைகள், அவை வளரும் சூழல், அவற்றின் உருவ அமைப்பு ஆகியவற்றை சங்கப் பாடல்களில் புலவர்கள் கண்டு விளக்கியிருக்கின்றனர். அந்த வகையில் சங்கப் பாடல்களில் சுட்டப்பட்டுள்ள பறவைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## சங்க இலக்கியத்தில் பறவைகள்

சங்க இலக்கியம் பறவைகளைப் ‘புள்ளினம்’ என்றே சிறப்பித்துக் கூறுகின்றன. சங்க இலக்கியத்தில் 33 பறவைகள் சுட்டப்பட்டுள்ளது. அவை முறையே அன்னம், இதழ்(வரகக் கோழி), எருவை(பிணம் தின்னிக் கழுகு), எழால் (வல்லூறு), கணந்துள்(ஆள்காட்டி), கழுமு, காக்கா, கிளி, குழைஞ(பேராந்தை), குயில், குருகு (கூழைக்கடா), கருங்கால் வெண்குருகு, வெள்ளாங்குருகு,

மலையுறை குருவி, முதுக்குறை குருவி (தூக்கணாங்குருவி), குறும்பூழ் (காடை), கூகை(கோட்டான்), கொக்கு, கோழி, கானக் கோழி, நீர்க்கோழி, சிரல் (மீன் கொத்தி) சிவல் (கௌதாரி), நாகனவாய் (மைனா), நாரை, பூநாரை, பருந்து, புறா, கோகில், மயில், வங்கா, வானம்பாடி போன்ற பறவைகளாகும்.

## மயில்

குறிஞ்சி நிலத்திற்கு அழகூட்டுவது மயில். இதனை,

"ஒள்ளொளி மணிப்பொறி மஞ்ஞை" (Balasubramaniyan, 2007)

என்று பரிபாடல் சுட்டும். மயில், வேங்கை மரத்திலும் (குறுந். 26:1-2),

மாமரத்திலும் (கலித். 36:1-2), குருந்த மரத்திலும் (அகம். 242:2-3) தோன்றும். வேங்கைக் கிளையில் அமர்ந்தத் தோற்றம் காண்பதற்குப் பூக்கொய் மகளிர் போலக் காணப்படுகிறதாம் (குறுந். 347:1-4).

மயிலாடும் இயல்பினை,

"வான்றளி பொழிந்த காண்பின் காலை

அணிகிளர் கலாவம் ஐதுவிரித் தியலும்

மணியுறை எருத்தின் மஞ்ஞை" (Avvai Duraisamy Pillai, 2010)

என நற்றிணைப் பாடல் கூறும். மயில் ஆலவும் குடிஞை இரட்டவும் (ஐங். 291:3), அவ்வொலி கேட்டுத் தேனீக்கள் முரலும் (ஐங். 292:1-2), மயில் அகவ, அது ஊது கொம்பு போல இருக்கும் (பரி.21:32-33).

மலைகளில் மயில்கள் வாழ்வதை,

"கழை வளர் அடுக்கத்து இயலி ஆடு மயில்" (Kandhaiyaa, 2008)

வேங்கை வீ உகும் ஓங்கு மலைக் கட்சி

மயில் அறிபு அறயத மன்னோ"

என வரும் சங்கப்பாடல்களில் காணலாம்.

மயில் பீலிகைப் பின்னால் தூக்கிக் கொண்டு வருவதை குறுந்தொகை கூறியுள்ளது. மயில் தோகை விரித்து ஆடும். ஆடிப்பாடி ஆரவாரம் முடிந்தவுடன் பீலியை குவித்தன என்பதை,

"ஒலிநெடும் பீலி துயல்வர இயலி

ஆடுமயில் அகவும் நாடன் நம்மொடு"

என்ற பாடலடிகள் சுட்டும்.

மயிலின் கால்களில் உள்ள ஐந்து விரல்கள் நொச்சியின் ஐந்து பிரிவுடைய இலையைப் போல் இருப்பதை,

"மயில் அடி அன்ன மாக்குரல் நொச்சியும்" (Avvai Duraisamy Pillai, 2010)

"மயில் அடி இலைய மாக்குரல் நொச்சி"

என்னும் சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றது.

## அன்றில்

அன்றில் பறவை நெய்தலுக்குரிய பறவை என்று கூறப்பட்டாலும் குறிஞ்சியில் ஓரிடத்தில் மட்டும் குறிப்பிடப்படுகிறது. நெருப்பினை ஒத்த தலையினையும், இறால் மீனை ஒத்த அலகினையும் கொண்டது. அன்றில் என்பதை,

"நெருப்பின் அன்ன செந்தலை அன்றில்

இறவின் அன்ன கொடுவாய்ப் பெடையொடு"

என குறுந்தொகையில் மதுரை மருதனிள நாகனார் கூறுகின்றார்.

அன்றில் பனை மரத்தில் கூடு கட்டி வாழும் (குறுந். 301: 2-4), பானாட் கங்குலில் ஆண் அன்றில் பெண் அன்றிலை விளிக்கும் (குறிஞ்சி. 219-220). நள்ளென் யாமத்தில் ஆண் அன்றில் பெண் அன்றிலோடு ஒருங்கிருந்து ஒலிக்கும் (Nagarajan, 2007).

கூடி வாழும் இயல்பினை உடையது அன்றில். அது தன் இணையைப் பிரியும் காலத்தில் பெரிதும் வருந்தும் என்பதனை,

"ஒன்று இல் காலை அன்றில் போலப்

புலம்பு கொண்டு உறையும் புன்கண் வாழ்க்கை"

என்ற நற்றிணையடிகளில் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

பனையின் அடிப்பகுதி மத்தளம் போன்று பெருத்துக் காணப்படும். கடற்கரையில் உள்ள பனைமரத்தில் அன்றில் கூடு கட்டுவதை,

"செக்கர் தோன்ற துணைபுணர் அன்றில்

எக்கர்ப் பெண்ணை அகமடல் சேர"

என்னும் அகநானூற்றுப் பாடல் குறிக்கும்.

## கானக் கோழி

சங்க இலக்கியத்தில் வழங்கும் கானக் கோழி காடுகளில் வாழும் முல்லை நிலப் பறவையாகும். 'கானக் கோழியின் கழுத்தில் வெள்ளையும் கருப்பும் கலந்த கழுத்துத் தூவிகள் தானியக் கதிர் போல் இருப்பதை வரிக்குரல் மிடறு' என்று நற்றிணை வர்ணித்துள்ளது. நாணல் புதர்களிடையே இப்பறவை கூடு அமைத்து முட்டையிடும்.

இப்பறவை மேனி முழுவதும் நீலத்துடன் சிவப்பு கலந்த நிறத்தோடு விளங்கும். அலகும், அதன் மீதுள்ள கொண்டையும், கால்களும் மஞ்சள் கலந்த சிவப்பு நிறத்துடன் இருக்கும். கானக்கோழி பதினேழு அங்குல நீளமுள்ள உடலமைப்பைக் கொண்டதாகும். தண்ணீரில் உற்பத்தியாகும் செடி கொடிகளையும் புழுப் பூச்சிகளையும் முக்கிய உணவாகக் கொள்ளும் இப்பறவை தண்ணீரில் விளையாடுவதும், அங்கே வாத்து போல் மிதந்து நாணல் மீது அயர்ந்து வருவதும் அழகு மிக்க அரிய காட்சியாகும்.

தங்களுடைய உணவிற்காக உலர்த்திய திணையைக் கானக்கோழி கவர்ந்து உண்டதை,

"கானக் கோழியோடு இதல் கவர்ந்து உண்டென" (Avvai Duraisamy Pillai, 2008)

என புறநானூறு சுட்டும்.

மனைக் கோழியின் பசிய அழைப்பிற்குக் கானக்கோழியும் தன் கவர்ந்த குரலால் அழைப்பதை,

"கானக்கோழி கவர் குரலொடு"

என்ற புறநானூற்றடி சுட்டும்.

## நாரை

வயலும் வயலைச் சார்ந்த நிலமுமான மருத நிலப் பறவை நாரை. இது நீண்ட கால்களும், நீண்ட கழுத்தும் கொண்டது. இதன் அலகு நீண்ட கத்தி போன்ற மிகவும் கூர்மையானது. இதன் தலை,

பிடரியில் இருந்து நீண்ட இறகுகள் கொண்டைபோல் அமைந்துள்ளன. இந்தக் கொண்டை கருநிறத்தில் இருக்கும். கொண்டை என்ற இந்த இறக்கை பெண் பறவைகளுக்கு இல்லை.

நாரையின் தோற்றம் குறித்து,

“தடந்தா ணாரை பழந்திரை கவரும்

முடந்தை நெல்லின் கழையமல் கழனிப்” (Alis, 2007)

“அடும்பவி ழணிமலர் சிதை இமீ னருந்தும்

தடந்தா ணாரை யிருக்கு மெக்கர்த்

தண்ணந் துறைவற் றெடுத்து நந்நலம்”

என வரும் பாடல்கள் கூறுகின்றன. இப்பாடல்களில் நாரை, தடந்தாள் நாரை என்று அழைக்கப்படுவதைக் காணலாம். இப்பறவை நீரில் தன் தலையை இறக்கைகளுக்கு இடையில் வைத்துக் கொண்டு தூங்குவது போல் நின்று கொண்டு இருக்கும். ஏதாவது மீன் அல்லது தவளை வந்தால் தன் அலகுக்கு எட்டக் கூடிய அளவில் இரையைப் பிடித்துக் கொள்ளும்.

பலவகையான மீன்களை அருந்திய நாரை வயல் அருகில் உள்ள மருத மரத்தின் உச்சியில் தங்குகின்றன என்பதை,

“பழனப் பல்மீன் அருந்த நாரை15

கழனி மருதின் சென்னிச் சேக்கும்”

என்ற ஐங்குருநூறு பாடல் கூறுகின்றன.

நாரை தன் குஞ்சுகளுக்கு இரை தேடித் தருவதும், கூடு கட்டி வாழ்வதுமாகிய இதன் வாழ்வியலை,

“செவ்வீ ஞாழல் கருங்கோட் டிருஞ்சினைத்

தனிப்பார்ப்பு உள்ளிய தண்பறை நாரை

மணிப்பூ நெய்தல் மாக்கழி நிவப்ப”

“வாடை தூக்க வணங்கிய தாழை

யாடு கோட் டிருந்த வசைநடை நாரை”

என்னும் சங்கப் பாடலடிகளில் காண முடிகிறது.

## கணந்துள் (ஆள்காட்டி)

கணந்துள் பறவை பாலை நிலத்துப் பறவை. ‘அழகிய சிறகுகளையும், நெடிய கால்களையும் உடைய கணந்துள் என்னும் பறவை ஊறு செய்கின்ற ஆறலை கள்வர் உண்மையைத் தம் குரலால் அறிவுறுத்தி வழியில் புதியதாய்ச் செல்பவர்களின் கூட்டத்தை அவ்வழியிலிருந்து நீக்குகின்றன’ என்பதை,

“ஆற்றுஅயல் இருந்த இருங்கோட்டு அம்சிறை

நெடுங்காற் கணந்துள் ஆள் அறிவுறீஇ

ஆறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும்

மaiயுடைக் கானம் நீந்தி,

நிலையாப் பொருட் பிணிப் பிரிந்திசினோரே”

என வரும் குறுந்தொகையடிகள் குறிக்கும்.

பார்வை ஒன்றுபட வேடன் வலையை அமைத்ததைக் கண்ட நெடிய காலையுடைய கணந்தூள் பறவை ஓசையெழுப்புவதை,

“பார்வை வேட்டுவன் படு வலை வெரீஇ

நெடுங்கால் கணந்துள்அம் புலம்பு கொள்தெள்விளி

சுரம்; செல் கோடியர் கதுமென இசைக்கும்”

என்ற நற்றிணையடிகளில் காணலாம்.

## வண்டுகள்

ஐவகை நிலத்திலும் வண்டுகள் உண்டு. வண்டு இனத்தில் பல வகைகள் உள்ளது. வண்டுகள் உருவத்தில் சிறியது. வண்டின் இனங்களாக, வண்டு (திருமுருகு. 176), தும்பி (குறுந். 392:2), சுரும்பு (குறிஞ்சி. 148), மிஞிறு (குறிஞ். 111) என்று சங்கப்பாடல்கள் சுட்டுகின்றன. புலியை வேங்கைப் பூ என்றும், யானையின் புகர் முகத்தை வேங்கைச் சினை எனவும் கருதி இரண்டு விலங்குகளுக்கும் இடையில் சமாதானம் செய்யும் சான்றோர் போல வண்டு திரியும் (கலித். 46: 1-7) என கலித்தொகைக் கூறும்.

யானையின் மதநீரை உண்டு உண்ணுவதாகக் கனவு காணுவதை,

“துளிதலை தலைஇய சார னளிசுனைக்

கூம்புமுகை யவழித்த குறுஞ்சிறைப் பறவை

வேங்கை விரியினை ரூதிக் காந்தம்

டேனுடைக் குவிகுலைத் துஞ்சி யானை

யிருங்கவுட் கடாஅங் கனவும்”

எனவரும் அகநானூற்றுப் பாடலில் காணலாம்.

காந்தள் மொட்டின் மீது தும்பி இருக்கும் தோற்றம் மகளிரின் கைவிரலின் மீது இருக்கும் விரலிணி போன்று உள்ளதாம் (கலித்.43: 3-9). புற்றினைச் சூழ்ந்து மொய்க்கும் மின்மின (அகம். 72:3). அருமைப் பாடுடைய தூக்கணங் குருவியின் கூடு (குறுந். 374:5-6). கல்லை உண்டு வாழும் தூதுணம் புறவு (கலித். 56:16) என வண்டு பற்றி சங்க இலக்கயங்கள் குறித்துள்ளது.

தும்பி என்னும் ஒருவகை உயர்ந்த சாதி வண்டுகள் வந்து மொய்ப்பதை,

“நடுநாள் வந்து தும்பியுந் துவைக்கும்”

எனப் புறநானூறு பகரும்.

யானையின் மதம் மணம் நானும் தன்மைத்து. அதன் நறுமணத்திற்காக வண்டுகள் அதைச் சுற்றி மொய்க்கின்றனவாம். அக்காட்சியை,

“தேன் சிதைந்த வரை போல

மிஞிறார்ககுங் கமழ் கடாத்

தயறு சோரு மிருஞ் சென்னிய

மைந்து மலிந்த மழகளிறு”

என குறுங்கோழியூர் கிழார் என்ற புலவரும்,

“வரி ஞிமிறார்க்கும் வாய்புகு கடாஅத்

தண்ணல் யானை”

என்று ஔவையாரும் புறுநானூற்றில் குறித்துள்ளனர்.

அசுணம் என்ற குறிஞ்சிப் பறவை வண்டின் ஓசையை விழைந்து கேட்கும் இயல்புடையது (நற். 244:4-5). யானையில் மதநீரில் மொய்க்கின்ற வண்டுகளின் ஒலியை யாழொலி என எண்ணி அசுணம் மயங்கும் (அகம். 88:9-12).

## முடிவுரை

மேற்கண்ட கூற்றுகளின் வழி இயற்கையோடு இயைந்து இனிய வாழ்வு நடத்தும் பறவைகளைப் பற்றி நன்கு ஆய்ந்தறிந்துள்ள புலவர்களைப் பற்றியும் பறவைகளின் உணர்வுகள், பழக்க வழக்கங்கள், அவற்றின் வாழ்வியல் முறைகள் பற்றியும் அறிய முடிகிறது.

## References

Alis, A. (2007), Pathitrupathu, New Century Book House, Chennai, India.

Avvai Duraisamy Pillai, S. (2008) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Avvai Duraisamy Pillai, S. (2010) Natrinnai Moolamum Velakauraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Avvai Duraisamy Pillai, S. (2012) Pathitrupathu, Poompuhar Pathippagam, Chennai, India.

Balasubramaniyan, K.V. (2007), Paripadal, New Century Book House, Chennai, India.

Kandhaiyaa, N.S. (2008) Aganaanooru Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

Nagarajan, V. (2007) Kurunthogai, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License